குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.

சி. சி.216/2018

2022-ம் ஆண்டு மார்ச் 24 வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகி 5-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர் : திரு.ஏழுமலை வயது :

த/பெ : பழனி தொழில் :

ஊர் : சமயம் :

வட்டம் : ஜாதி :

மாவட்டம் :

முதல் விசாரணை .

முத்துநாயக்கன்பட்டி, எல்லாயூர் காட்டுவளவில் குடியிருக்கிறேன்.நான் கொத்துவேலை செய்கிறேன். 23.10.2017-ம் தேதி மாலை 4.00 மணிக்கு எல்லாயூர் காட்டுவளவில் அமைந்திருக்கும் எங்கள் வீட்டு முன்னர் போலீசார் வந்து பார்வை மகஜர் தயார் செய்து மாதிரி வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும், எனது மனைவி சுகன்யாவும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ. 2

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது வீட்டின் அருகில் ஒரு பழனிசாமி என்பவரின் விவசாயம் நிலம் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேலும் லட்சுமி முதலியார் என்பவரின் விவசாயம் நிலம் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்கே சின்னதம்பி என்பவரது ஓட்டுவீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி சின்னதம்பியின் வீட்டிற்கு மேற்கே அவரது விவசாய நிலம் அமைந்துள்ளது என்றால் சரிதான். அவர்கள் விவசாயம் தான் செய்கிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் அனைவரும் தங்களது நிலத்தில் பகலில் வேலை செய்வார்கள் என்றால் சரிதான். அ.சா.1 பழனிகவுண்டர் எனது அப்பா ஆவார். சம்பவம் உண்மையாக நடந்திருக்கும் பட்சத்தில் அவ்வாறு தங்களது விவசாய நிலங்களில் வேலை செய்யும் நபர்களிடம் போலீசார் பார்வை மகஜரில் கையொப்பம் பெற்றிருப்பார்கள் என்றாலும், அவ்வாறு சம்பவம் நடக்கவில்லை என்பதால் தான் போலீசார் என்னிடம் பார்வை மகஜரில் கையொப்பம் பெற்றுள்ளனர் என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தோன் என்றாலும் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.

மறு விசாரணை. இல்லை

ஓம்/-ஏழுமலை

ஓம்/- M.A.சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்(FAC)
ஓமலூர்.